# வாலிபன்
# VAALIPAN

இதழ் - 52 / வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை / பங்குனி - 2012




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன்
VAALIPAN

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,

உலக இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தவசு நாட்களுக்கூடாய் கடந்துவரும் நாங்கள் எமது சரீரத்தை ஒடுக்குவது மட்டுமன்றி அதனூடாக ஆண்டவரோடு உள்ள அந்நியோன்னியத்தையும் அதிகரித்துக் கொள்ளவும் முயற்சிக்க வேண்டும். நான் வாசித்த ஒரு புத்தகத்தில் இவ்வாறு காணப்பட்டது.

நேசம் என்னும் மலரானது
நேரம் என்னும் தோட்டத்தில்தான் வளரும்.

நம்மை உருவாக்கிய பிதாவோடு நாம் அதிக நேரத்தைச் செலவழிக்கும்போது அந்த அன்னியோன்யம் அல்லது நேசம் வளருவதைக் காணலாம். இது சாதாரணமாய் விளங்கிக்கொள்ளக் கூடியதொன்று! ஆனால், இந்த அவசரமான உலகிலே இது எவ்வாறு சாத்தியம் என்பது தான் பிரச்சினை அல்லவா? அன்பானவர்களே, ஆகவேதான் இந்த லெந்து நாட்களிலாவது சற்று நேரத்தை ஒதுக்கி; சரீரத்தை ஒடுக்கி; பாவத்தை வெறுத்து பரமனின் பாதம் அமர்ந்து அவரோடு உறவாட முன்வருவோமாக!

இன்று சிலர் லெந்து நாட்களை இவ்வாறு புரிந்து வைத்திருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. அதாவது இந்நாட்களில் நான் புகைபிடிப்பதை அல்லது மதுபானம் அருந்துவதைத் தவிர்த்துக்கொள்வேன் என பெருமையுடன் மார்தட்டிக்கொள்கின்றனர். இது எவ்விதத்திலும் எம்மை ஒடுக்குவதாகவோ, தியாகம் செய்வதாகவோ அமையாது. மாறாக, அதிக ஆக்கினைக்காக எம்மை நடத்துவதாக அமையும். ஏனெனில், லெந்து நாட்களைக் குறித்து அல்லது ஆண்டவரைக் குறித்து அறிந்திருப்பதனால் அல்லவா இவ்வாறு செய்ய எத்தனிக்கின்றோம். சிந்தியுங்கள்!

வாலிபன் ஊழியங்களின் "சபை இணைப்பாளர்கள்" கூடுகை இம்மாதம் 7ம் திகதி செல்வநாயகம் மண்டபத்தில் சிறப்பாய் நடைபெற்றது. 80க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும், 'வாலிபன்' ஊழியங்களை மத்திய மலைநாட்டிலும் விஸ்தரிக்க தங்கள் ஜெபங்களை வேண்டி நிற்கிறோம். இதை வாசிக்கின்ற யாராவது இதுபற்றி எம்மைத் தொடர்புகொண்டு உதவ விரும்பினால் தயவுசெய்து எமது விலாசத்திற்கு அல்லது தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிக்கொள்கின்றோம்.

மேலும், வாலிபன் ஊழியங்கள் பற்றி மேலும் அறிந்துகொள்ள விரும்புவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளக் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வூழியம் வளரவும், பெருகவும் எங்களுக்காய் ஜெபியுங்கள்.

*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

## கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்........ 22

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

ஜோன் வெஸ்லி அவர்கள் ஒவ்வொருநாளும் அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்துவிடுவார் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆலய ஆராதனை எட்டு மணிக்கென்றால், அதற்கு முன்பாகக் குறைந்தது இரண்டு மணிநேரமாவது ஜெபத்தில்தரித்திருப்பார். ஜெபத்திற்கென அதிக நேரத்தை செலவிட்டது அவருக்குப் புதிய பெலனைக் கொடுத்த உணர்வைத் தந்தது. "இந்த நாட்களில் எனது ஆவி விசாலமடைந்தது. நான் அதிக சோதனைகளால் தாக்கப்பட்டபோதிலும் அவை யாவற்றிலும் வெற்றிய டைந்தேன்" என அவரால் எழுதப்பட்ட அநேக நூல்களில் குறிப்பிட்டுள் ளார். தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தும் எந்த வொரு முயற்சியிலும் வெஸ்லி அவர்கள் ஈடுபட முயற்சிக்கவேயில்லை.

வெஸ்லி ஐயர் அவர்கள் பொதுவாகக் கருத்தோடு காரியங்களைக் கற்றுக்கொள்ளும் ஒருவராகவே காணப்பட்டார். இப்போது அவர் பரிபூரண ராகிய பரிசுத்த ஆவியானவராகிய ஆசிரியரின் கீழ் யாவற்றையும் நன்கு கற்று ஆவியில் துரிதமாக வளர்ந்தார். "ஜெப வளர்ச்சி" எனும் நூலில் குறிப்பிடும்போது "அதிகாலை படுக்கையிலிருந்து எழுந்தது முதற்கொண்டு, பிற்பகல் வரை தான் கிறிஸ்துவின் பிரமாணம் நிறைவேற இரவும், பகலும் கண் அயராது தான் மிகவும் பாடுபட்டு உழைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ஜேர்மனி தேசத்திலுள்ள அநேக மக்களையும் கிறிஸ்துவண்டை சேர்க்க வேண்டுமென்ற ஆவல் ஜோன் வெஸ்லி அவர்களிடம் நிரம்பியிருந்தது. மொரேவிய மக்களை முதன்முதலில் சந்தித்தபொழுது, அவர்களுடைய விசுவாசமானது வெஸ்லி அவர்களுக்கு சவாலாக இருந்தபடியால், அம் மக்களுடைய தலைமை ஸ்தாபனங்களை ஜேர்மனி தேசத்திற்கே சென்று, நேரில் காண வெஸ்லி அவர்கள் மிகவும் விரும்பினார். இத்தூய்மையான மக்களின் தொடர்பானது, தன்னுடைய ஆத்துமா உறுதியடையவும் விசுவா சத்திலும் பெலத்திலும் அதிகமாக வளர உதவியாக இருக்குமென உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக நம்பினார். ஆகவே, தனது தாய் சூசன்னாளிடம் விடைபெற்றுக் கொண்டு ஜேர்மனி தேசத்திற்குப் புறப்பட்டார்.

இந்தத் தேவனுடைய மனிதன் ஜேர்மனி தேசத்தில் செய்த ஊழிய விபரங்களை நூல்கள் பலவற்றில் தேடியபோதும் குறிப்புக்கள் கிடைப்பது கடினமாக இருந்தது. ஆயினும் ஒரு நூலில் கண்டபடி ஜேர்மனியைச் சேர்ந்த 'மரியன்பார்க்' என்ற இடத்தில் தங்கியிருந்ததின் மூலம் வெஸ்லி அதிக பயனடைந்தார். 'மரியன்பார்க்'கிலுள்ள மொரேவியரின் ஆவிக்குரிய ஸ்தாபனத்தின் தலைவராகிய 'கவுன்சின்டாப்' என்பவரையும் சந்தித்தார். இம்மொரேவிய மக்களுடைய ஒழுக்கம், அவர்கள் வாழுகின்ற முறை, அவர்களுடைய கொள்கை யாவையும் வெஸ்லி அவர்கள் அவதானத்துடன் கற்றார்.

பரலோகத்தின் தென்றல் வீசுவதும் கிறிஸ்தவக் கிருபை வரங்கள் பலுகிப் பெருகிச் செழித்துள்ளதும், நீதிமான்கள் வாசம் செய்வதுமான இவ்விடத்திலேயே வெஸ்லி அவர்கள் தங்கியிருந்தார். ஆனால் இந்த இனிமையான இடத்திலிருந்து வெஸ்லி ஐயரை கிறிஸ்து அழைத்து வந்துவிட்டார். வெஸ்லி அவர்கள் இச்சம்பவம் பற்றி எழுதுகின்றபோது "மகிழ்ச்சியுடன் இவ்விடத்தில் என் காலத்தைச் செலவிட்டிருப்பேன். ஆனால் என் கிறிஸ்து அவருடைய திராட்சத்தோட்டத்தின் மற்றொரு பகுதியில் நான் உழைக்கும்படியாகத் தெரிந்து என்னை அனுப்புகிறார். ஆகையினால் மிகுந்த மன பாரத்துடன் இந்த மொரேவிய சகோதரர்களை விட்டுப் பிரிகிறேன்" என எழுதியுள்ளார். மீண்டும் கப்பல் ஏறி இங்கிலாந்துக்குப் பயணமாகிறார். இங்கிலாந்து தேசத்தையே மாற்றிவிடத்தக்கதான மாபெரும் பணியை ஆற்ற, உயிர்ப்பிக்கப்பட்ட உற்சாகத்துடனும், பலப்படுத்தப்பட்ட விசுவாசத்துடனும் வெஸ்லி ஐயர் இங்கிலாந்து திரும்புகிறார். இப்போது அவருக்குள் வந்துள்ள புதிய தரிசனத்துடன், அவருடைய ஆத்துமா புது பெலனடைகிறது. பரிசுத்த ஆவியானவரின் அனல் இங்கிலாந்து நோக்கித் திரும்ப ஆரம்பிக்கிறது. **(வெஸ்லி மீண்டும் வருவார்...)**

**"....உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"** (எரேமியா 16 : 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிந்தவருக்கு துக்கமில்லை

ஒரு கிறிஸ்தவனை அழித்தால் ஓராயிரம் கிறிஸ்தவர்கள் எழும்புவார்கள் என்பதற்கு சாட்சியாக விளங்குபவன் **ஸ்தேவான்!**

கிறிஸ்தவ உலகின் **முதல் இரத்த சாட்சி** இவர். அன்று முதல் இன்றுவரை தங்களையே இரத்த சாட்சியாக அர்ப்பணிப்போர் எண்ணிக்கைக்கு அடங்காதவர்கள். இந்த சாட்சிகளின் முன்னோடி என்று இவரை அழைத்தால் அது சாலப்பொருந்தும்.

இவர் கிரேக்க மொழி பேசும் ஒரு யூதர். 'ஸ்தேவான்' என்றால் **முடி** அல்லது **கிரீடம்** என்பது பொருள். பெயருக்கேற்றாற்போல கிறிஸ்துவிடமிருந்து தனது மரணத்தின் மூலம் கிரீடத்தைப் பெற்றவர்.

எருசலேம் சபையில் செல்வாக்குப் பெற்றவர். பந்தி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஏழு பேரில் முதன்மையானவர். கிரேக்க விதவைகளுக்கு அன்றாட உணவை கவனிக்கும் பணியை செய்து வந்தவர். விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்த இவர், பரிசுத்த ஆவியின் நிறைவையும் பெற்றவர். ஆண்டவரிடமிருந்து அற்புத அடையாளங்களைச் செய்யும் வரத்தினைப் பெற்றிருந்தார்.

கிரேக்க மொழி பேசும் யூதருடைய ஆலயங்களில் **இயேசுவே மேசியா** என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறியதால் யூதர்களின் வெறுப்புக்கு ஆளானார். எனினும் தைரியத்தோடு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கித்தார்.

**ஸ்தேவான்**



"பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேத பிரமாணத்துக்கும் விரோதமாக தூஷணம் பேசுகிறான்" என்று குற்றம் சாட்டப்பட்டார். ஆலோசனைச் சங்கத்தாரின் முன்பு நிறுத்தப்பட்டார்.

ஸ்தேவானின் பதில்களால் எதிரிகள் ஆச்சரியமும், ஆத்திரமும் கொண்டனர். பல்லைக் கடித்தனர். பலவந்தம் பண்ணத் துடித்தனர். ஆனால் ஸ்தேவானோ தேவ தூதனைப் போல் காட்சியளித்தார். விசுவாச உறுதியுடன் பதிலளித்தார். யூத தலைவர்களின் கோபம் அதிகரிக்கவே கிறிஸ்துவின் தொண்டன் ஸ்தேவான் கல்லால் எறியுண்டு, கர்த்தரின் மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்டார். விசுவாச வீரன் இரத்த சாட்சிகளின் வித்து ஆனார்.

அன்பான சகோதர/சகோதரிகளே! நீங்களும் கிறிஸ்துவின் பணியில் இரத்த சாட்சியாக மரிக்க ஆயத்தமா? கர்த்தரிடத்திலிருந்து கிரீடத்தைப் பெற ஆயத்தமா?

| | |
|---|---|
| பெயர் | : ஸ்தேவான் |
| நாடு | : எருசலேம் |
| தரிசன பூமி | : எருசலேம் |

**சகோ.சுரேன்**

உதவி : மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னுடைய விசுவாசம் எப்படி உள்ளது?



எமது கிறிஸ்தவ வாழ்வில் விசுவாசம் முக்கியமானதோர் இடத்தை வகிக்கின்றது. வாழ் வின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் விசுவாசம் எம்மை வழிநடத்திச் செல்வதை அவதானிக்கலாம். ஆண டவர் மீது விசுவாசம் கொள்வது வேண்டப்படுகின்ற ஒன்றாகும். எனவே தான் ஆண்டவர் இயேசு கலக்கத்தில் வாழ்ந்த சீடர்களைப் பார்த்து தேவனில் விசுவாசம் கொள்வதன் ஊடாக ஆறுதலைப் பெற்றுக்கொள்ளுமாறு அழைக் கின்றார் (யோவான் 14:1).

எமது விசுவாசத்தை நாம் அறிக்கையிட அழைக்கப்படுகின் றோம். குறிப்பாக இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்த னத்திலிருந்து தங்களை மீட்ட கடவுள்மீது தாம் கொண்டிருக் கும் விசுவாசத்தை அறிக்கை யிட்டு வந்தனர் (உபா. 26:5).

எனவே ஆண்டவர் மீது நாம் கொண் டிருக்கும் நம்பிக்கையை நாம் பிறர் முன்னிலையில் அறிக்கையிடுவதன் ஊடாக இன்னுமொருவரை விசுவாச வாழ்விற்குள் அழைக்கின்றோம். குறிப் பாக பவுல், தீமோத்தேயுவிடம் காணப் படுகின்ற விசுவாசம் அவனுடைய தாயா ரிடமிருந்தும் பாட்டியிடமிருந்தும் பெற் றுக்கொள்ளப்பட்டதெனக் கூறுகின்றார் (2 தீமோ 1:5).

ஆண்டவர் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தை ஆண்டவரை பரீட்சை பார்க்கும் இடமாக நாம் மாற்றிவிடக் கூடாது. இயேசுவுக்கு நேரிட்ட சோத னையின் போது பிசாசானவன் இயேசு பிதாவானவர் மீது கொண்டுள்ள விசு வாசத்தை பரீட்சை பார்க்கும் வகையில் தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து குதிக்குமாறு வேண்டுகின்றான் (லூக் 4:9). எனினும் இயேசு அக்கோரிக்கையை நிராகரிக்கின்றார். மேலும் எங்கள் விசு வாசம் ஆண்டவருடைய வல்லமை யைக் குறுகியதோர் வட்டத்தில் கட் டுப்படுத்திவிட நாம் பார்த்துக்கொள் ளக் கூடாது. குறிப்பாக சாத்திராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்றவர் கள் "ஆண்டவர் எங்களை அக்கினிச் சுவாலையிலிருந்து காக்க வல்லமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளவராக இருக்கிறார். அவர் எம்மை பாதுகாக்காமல் போனாலும் நீர் நிறுத்திய பொற்சிலையை வணங்க மாட்டோம்" எனக் கூறுகின்றனர். ஆண்டவர் அக்கினிச் சுவாலையிலிருந்து பாதுகாப்பவர் மாத்திரமல்ல, அதற்கு அப்பாலும் ஆண்டவருடைய செயற்பாடு உண்டு என அவர்கள் நம்பிக்கை வைத்தனர் (தானியேல் 3:16-18). இப்பேர்ப்பட்ட விசுவாசம் எங்களிடம் காணப்பட வேண்டும் எனக் ஆண்டவர் விரும்புகிறார்.

ஆண்டவர் மீது கொண்டுள்ள விசுவாசம் எங்களைச் செயல்பட அழைக்கின்றது. ஆண்டவருடன் சரியான உறவுள்ள ஒரு மனிதன் அதனைப் பிறருக்குச் செய்யும் செயல்களின் ஊடாக நிரூபிக்கின்றான். எனவேதான் யாக்கோபு தமது நிருபத்தில் செயல்களற்ற விசுவாசத்தில் எத்தகைய பயனும் இல்லை எனக் கூறுகின்றார் (யாக்கோபு 2:26). உயிர் இல்லாத உடலில் எவ்விதப் பயனும் இல்லை. இதைப்போன்றே செயற்பாடு அற்ற விசுவாசம் காணப்படுகின்றது என ஆசிரியர் கூறுகின்றார். எமது விசுவாசம் மனிதர்கள்மட்டில் நாம் மேற்கொள்ளும் செயற்பாடுகளால் தீர்மானிக்கப்படுகிறது எனலாம்.

ஆண்டவரால் எமக்கு அருளப்படும் விசுவாசம் எம்மை நீதிமானாக்கி நாம் பாவத்தோடு போராடும் வல்லமையை, சக்தியை எமக்கு அருளுகின்றது (ரோம 1:17). இதனூடாக மனிதன் பரிசுத்தமாகுதல் நிலைக்குள் பயணிக்க அவனுக்கு உந்துசக்தி அளிக்கின்றது (எபே 2:4). மேலும் எம்மிடையே காணப்படும் அவிசுவாசம் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுவதற்கு எப்போதும் தடையாகக் காணப்படுகின்றது. அவிசுவாசத்தை அகற்றுவதன் ஊடாக விசுவாசத்தில் எம்மால் வளர முடியும் (மாற்கு 9:24).

மேலும் ஆண்டவர் மீது நாம் கொண்டுள்ள விசுவாசம் ஓர் வளர்ச்சிப்படி நிலையைச் சார்ந்ததாகும். அற்புதங்களை நாம் காணும்போது மாத்திரம் தேவனில் விசுவாசம் கொள்ளாமல் எல்லா நிலைகளிலும் எங்கள் விசுவாசத்தை வைக்க அழைக்கப்படுகின்றோம். உதாரணமாக 5 அப்பங்களையும் 2 மீன்களையும் வயிறார உண்ட மக்கள் இயேசுவில் நம்பிக்கை கொண்டு மறுநாளிலும் உணவு தேடி வந்த போது அடையாளத்தின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையை இயேசு கடிந்து கொள்கிறார் (யோவான் 6:26). இந்நிகழ்வு நாம் இயேசு கிறிஸ்துவின் மீது வைக்கும் நம்பிக்கை அரும் அடையாளங்களின் அடித்தளத்தில் மாத்திரம் உருவாகிவிட முடியாது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

எம்மிடத்தில் காணப்படும் நம்பிக்கை எம்மை விடுதலை செய்யும் ஓர் கருவியாக இருப்பதை நற்செய்திகள் கூறுகின்றன. ஆண்டவர் இயேசு கானானியப் பெண்ணை நோக்கி "அம்மா உமது விசுவாசம் பெரியது" என அவளைப் பாராட்டி அவளுக்கு சுகமளிக்கின்றார் (மாற் 7:24-30). மேலும் எமது விசுவாசத்தால் எமக்கு ஆண்டவருடைய ஆசீர்வாதம் கிடைக்கின்றது என நாம் பறைசாற்றாமல் அவரின் அருளாலே ஆசியை நாம் பெறுகின்றோம் என மறந்து விடக்கூடாது.

ஆண்டவரால் எமக்கு அருளப்பட்ட விசுவதாசத்தை நாம் அறிக்கையிடவும், பிறருக்கு எடுத்துக் கூறவும் செயல்களுடன் தொடர்பு படுத்தவும் பரிசுத்த நிலைக்கு எம்மை இட்டுச் செல்லவும் பயன் படுத்த வேண்டும். மேலும் எமது விசுவாசம் அடையாளங்களில் மாத்திரம் கட்டியெழுப்பப்படாமல் ஆண்டவரின் வல்லமையை அதற்கு அப்பாலும் அனுபவிக்க எம்மைத் தயார்படுத்த வேண்டும். தோமா தான் விசுவாசித்த ஆண்டவருக்காக எவ்வாறு தன் உயிரைக் கொடுக்க முன்வந்தாரோ அதேவகையில் நற்செய்திக்காக, உண்மைக்காக வாழ விசுவாசம் எம்மைத் தூண்ட வேண்டும்.

**அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன்**
இலங்கை இறையியல் கல்லூரி,
பிலிமத்தலாவை.

# கவிதைப்போட்டி - 36

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**"நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும்...." (யோவான் 15:7)**

இறுதித் திகதி **04.04.2012**

## கவிதைப் போட்டி - 35ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**"அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன்" (எரேமியா 31:3)**



சிறகொடிந்த பறவைபோன்ற
சிறையிருப்பான எம்வாழ்வில் - என்
சிந்தனைக்கும் அப்பாலே
சிநேகித்த தேவனின் அன்பே மெய்யான அன்பு...!


**அபிஷேக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 51

உருவாக்கம் : J.சேரா




## மேலிருந்து கீழ்

01) இது பொல்லாங்கனுடைய புத்திரருக்கு ஒப்பிடப்படுகிறது.

02) வெளிச்சம் இப்படிப்பட்டதென்று தேவன் கண்டார் (தலைகீழ்).

03) எல்லாத் தீமைக்கும் வேரானது இந்த ஆசை (தலைகீழ்).

05) இங்கிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா என்றான் நாத்தான்வேல்.

09) நாம் இதினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டும் (குழம்பியுள்ளது).

10) ரெபேக்காளின் தந்தை.

11) கர்த்தர் நமக்காக இது பண்ணுவார் (இறுதி எழுத்தின்றி குழம்பியுள்ளது).

12) இவள் தன்னுடைய புருஷனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்கிறார் பவுல் (தலைகீழ்).

14) புதிய எருசலேமில் 12 விதமான இதனைத் தரும் ஜீவ விருட்சம் உள்ளது.

## இடமிருந்து வலம்

01) கர்த்தருடைய நாமம் பலத்த ............... (உதவி - நீதிமொழிகள்)

04) இத்தினத்திற்காக கவலைப்படக் கூடாது (திரும்பியுள்ளது).

06) இது எங்கேயோ அங்கே கழுகுகள் கூடும் (திரும்பியுள்ளது- இறுதி எழுத்தில்லை).

07) சாமுவேல் இந்நூல் ஏபோத்தைத் தரித்து பணிவிடை செய்தான்.

08) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து இப்படிப்பட்டதைப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

11) சாத்தானின் இதுக்கும் ஸ்திரீயின் இதுக்கும் பகையுண்டாக்குவேன் என்றார் தேவன் (குழம்பியுள்ளது).

13) தேவன் இதை சந்தோஷமாக் [illegible] (திரும்பியுள்ளது).

15) மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் கொடுத்தது (இறுதி எழுத்து இல்லை).

16) கண்ணுக்கு கண், இதற்கு இது என்பது பழைய ஏற்பாட்டு வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 இற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01) வஸ்திரம்
03) பிசைச் (பிச்சை)
05) வயல்
06) ன்கரவச (சவரகன்)
07) பரஸ் (பர{தீ}ஸ்)
08) கண்மணி
09) தோல்
10) ரம்வா (வாரம்)
12) புல்

**மேலிருந்து கீழ்**

01) வச்சிரக்கல்
03) பிறன்
04) மல்குஸ்
07) பணிர (பரணி)
09) தோம் {சோ}தோம்
11) ம்கா (காம்)

## குறுக்கெழுத்துப் போட்டி 50க்கான சரியான விடை எதுவும் பெறப்படவில்லை.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 51ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 04.04.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப்போட்டி - 51
"வாலிபன்",
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்
மட்டக்களப்பு.



# சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி இலக்கம் - 43

1) "உங்களை மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று இயேசு அழைத்தது?

..............................................................................

2) யாக்கோபு, யோவானுடைய தகப்பன் யார்?

..............................................................................

3) இயேசு யாரை நோக்கி, "எனக்கு சித்தமுண்டு, சுத்தமாகு" என்றார்?

..............................................................................

4) யோவான்ஸ்நானகன் வனாந்தரத்தில் எதைக்குறித்து பிரசங்கித்தான்?

..............................................................................

5) இயேசு எத்தனைநாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார்?

..............................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா விடைப் போட்டி 42 இற்கான விடைகள்**

1) எல்க்கானா
2) அன்னாள்
3) ஏலி
4) ஒரு காளை
5) எளியவனை

**வினா விடைப் போட்டி 42ல் சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி**

**அ.ஜெரோனிக்கா**
288/A, சாரதா வித்தியாலய வீதி,
நாவற்குடா - கிழக்கு.
மட்டக்களப்பு.

☞ இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.
☞ வினா விடைப்போட்டி 43இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **04.04.2012**

அனுப்ப வேண்டிய முகவரி :
**ஆசிரியர்,**
**வினாவிடைப் போட்டி - 43**
**'வாலிபன்' -**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

– 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
– ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

# உன்னில் ஏன் கலக்கம்???

உன்னில் தான் ஏன் கலக்கம்
யாரோ எதுவோ சொன்னார் என
தேவ பிள்ளையாம் நீ கலங்கலாமா?
தூற்றுவோர் இன்னும் தூற்றட்டுமே
வசைமாரி பொழிவோர் பொழியட்டுமே
ஏளனமாய்ப் பார்ப்போர் பார்க்கட்டுமே
பொய்யுரைப்போர் எதிராய்ப் பொய்யுரைக்கட்டுமே
யோசேப்பிற்கு எதிராய் போர்த்திபாரின் மனைவி
பொய்யாய் பழி சொல்லவில்லையா?
நிந்திப்போர் எவ்வளவும் நிந்திக்கட்டுமே
அன்னாளை பிள்ளையில்லை என நிந்திக்கவில்லையா?
உற்ற நண்பரும் கைவிடட்டுமே
கெட்ட குமாரனையும் நண்பர் கைவிடவில்லையா?
யார் என்ன சொன்னாலும் கலங்காதே
இறைமைந்தனே - நீ
உண்மையாய் இருக்கும் வரை
எதற்கும் கலங்காதே!
வல்லவராம் இயேசு இருதயத்தைப் பார்ப்பவர்
பொய்யுரையா உண்மை நாதன்
மறவாத அன்பின் வேந்தன்
எப்போதும் உனக்குண்டு மறவாதே!
உன் சாட்சி உன்னதத்திலல்லோ இருக்கிறது
இத்தனையும் உனக்கிருக்க இறைமைந்தனே
உன்னில் ஏன் கலக்கம்
பாடுகளை உதறிவிட்டு
கழுகைப்போல் உயர எழுந்து வா
இறை சித்தம் செய்ய....




சகோதரி **V.எமிலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடுகளால் சோர்ந்து போயிருக்கிறாயா?



இவ்வுலகத்திலே நாம் ஜீவிக்கின்ற நாட்களில் பல்வேறுபட்ட மனிதர்களைச் சந்திக்கின்றோம். வித்தியாசமான சூழ்நிலைகளுக்கூடாக கடந்து செல்லுகிறோம். வேலை செய்யும் இடங்களில், படிக்கின்ற இடங்களில் மற்றும் நாம் செல்லுகின்ற இடங்களில் எல்லாம் பல்வேறு சவால்களையும் பாடுகளையும் நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. அதிலும் விசேஷமாக கிறிஸ்துவுடன் நெருங்கி ஜீவிக்கின்ற பிள்ளைகளுக்குச் சவால்களும், பாடுகளும் மிக அதிகமே... **என்ன சொல்லுகிறீர்கள் பிரியமானவர்களே?**

அன்றாடம் எமது வாழ்க்கைப் பயணத்தில் நாம் சந்திக்கின்ற காரியங்கள் ஒவ்வொன்றும் எம்மை சிந்திக்கத் தூண்டுவனவாகவே உள்ளன. மனிதர்கள் எங்களைக் காரணமில்லாமல் பகைக்கின்றபோது அல்லது சக மனிதர்களாலேயே நாங்கள் பாடுகள் அனுபவிக்கின்ற பொழுது, அவற்றை பொறுமையோடு சகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்த அவருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் **"தீமை செய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால் நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" (I பேது 3:17).** ஏனெனில் கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் நமது பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்.

எத்தனை பாடுகள் நம்மை வந்து சூழ்ந்துகொண்டாலும் நாம் அதைக் குறித்து கவலைப்படாமல், சந்தோஷமாய் இருக்க அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் நாம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்களாயிருப்போம். ஏனென்றால் தேவனுடைய மகிமையுள்ள ஆவியானவர் நம்மேல் தங்கியிருக்கிறார் அல்லவா? நிந்தனைகள், பாடுகள் என்பன நமக்கு பொறுமையைக் கற்றுத்தருகிறது. பாடுகளானது நாம் தேவனோடு இன்னும் நெருங்கி விசுவாசத்தில் வளர உதவி செய்கிறது. எனவே, "ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினி மித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1 பேதுரு 4:16). இதைத் தான் பரிசுத்த வேதாகமமும் எமக்கு தெளிவுபடுத்துகிறது. நாங்கள் குற்றஞ் செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு? மாறாக நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக பிரீதியாயிருக்கும். இதற்காகவே அவருடைய பிள்ளைகளாகிய நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். தொடர்ந்து வருகின்ற போராட்டங்களை ஜெயித்து இயேசு கிறிஸ்துவின் அன்பில் இன் னும் அதிகமாக பலப்படுவோம். பாடுகளுக்கூடாக கடந்து சென்று இயேசு காட்டிய பாதையில் நடக்க வாஞ்சிப்போம்.

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னமே, எமக்காக, எம்முடைய பாவங்களை, பாடுகளை, துக்கங்களைச் சுமப்பதற்காகவே இயேசுகிறிஸ்து சிலுவையிலே பாடுகள் அனுபவித்தார். "நம்முடைய பாடுகளை அவர் ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார்" (ஏசா 53:5). ஹோமியோபதி வைத்திய முறையைக் கண்டுபிடித்த ஹனிமேன் என்ற மேதை, மலேரியா நோயின் கொடுமையை அழிக்க மருந் தொன்றைத் தேடினார். நீண்டநாள் முயற்சிக்குப் பின் ஒரு புதிய மருந்தை அவர் தயாரித்தார். பிறகு, மலேரியா நோயின் வலி யையும், அதை எதிர்க்க தாம் தயாரித்த மருந்தின் சக்தியையும் தாமே அனுபவித்தறிய முயன்றார். இதற்கு அவர் முதலில் மலே ரியா நோய்க் கிருமிகளைத் தனது உடலில் செலுத்திக்கொண் டார். சில மணி நேரங்களில் கொடிய மலேரியா நோய் அவரை தாக்கத் தொடங்கியது. நோயின் உச்சக்கட்டம் வரும்வரை அவர் அமைதியாக இருந்தார். பிறகு தான் தயாரித்த மருந்தை தனது உடலில் செலுத்தினார். நோய்க்கும் மருந்துக்கும் போராட்டம் நடந்தது. அவர் குணமடைந்தார். எனவே, தைரியமாக அந்த மருந்தை மருத்துவ உலகுக்கு அளித்தார்.

இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பான சகோதரர்களே! இதைப் போலவே இறைமகன் இயேசுகிறிஸ்துவும் உங்கள் ஒவ்வொருவருடைய பாடுகளையும் தன்மீது ஏற்றுக்கொண்டார் என்பதையுணர்ந்து பாடுகளைக் கண்டு சோர்ந்து போகாதீர்கள். இக்காலத்துப் பாடுகள் யாவும் இனி வருகின்ற நாட்களிலே உங்களை கிறிஸ்துவுக்குள்ளான சாட்சியான ஜீவியம் ஜீவிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுக்கும் என்பதை நினைந்து அவரைத் துதியுங்கள். பாடுகள் உங்கள் வாழ்க்கையிலே பல பாடங்களைக் கற்றுத்தர.... அசையாமல் உறுதியுடன் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருங்கள். நிச்சயமாகவே....

"உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார்.
உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்.
கர்த்தர் நீதி செய்கிற தேவன்..." - (ஏசா 30:18)

என்பதை மறந்துவிடாதீர்கள்.

**J.டெய்சி**
'வாலிபன்' குடும்பம்

# உணர்ந்திடுவேன் இயேசுவின் அன்பு



பாடுகளும், கலக்கங்களும்
பாதை தெரியாத தருணங்களும்
ஓடுகின்ற நீர் போல
உறுதியில்லா காலங்களும்...

கடந்து வந்த பாதையிலே - நான்
கண்டு கொண்ட தோல்விகளும்
உடைந்து போன நேரங்களில் - என்
உள்ளம் தேடிய ஆறுதலும்

உலகத்தையே உற்றுநோக்கி
உபத்திரவத்தையும் தேடிக்கொண்டு
கவலையால் நிறைந்து கண்ணீர் விட்ட நாட்களிலே
கரம்பிடித்து வழிநடத்திய என் நேசர் இயேசுவை
என்றும் மறப்பேனோ... இல்லை மறப்பேனோ??

அழிந்துபோகும் பொன்னுக்கு
அக்கினியே சோதனை போல
மறைந்து போகும் இவ் உடலுக்கும்
எத்தனை எத்தனை சோதனைகள்
அத்தனையும் இயேசுவின் வருகையிலே
எனக்காக வைக்கப்பட்டிருக்கும் சாதனைகளல்லவோ...!

உலகம் தரக்கூடாத சந்தோஷத்தை
உன்னதர் இயேசு கொடுக்காமல் இருப்பாரோ
உபத்திரவத்தின் வழியாக செல்லும் வேளை இன்னும்
உணராமல் இருப்பேனோ
உன்னதர் அன்பினையே...

**J.D.ஷர்மி**
கோட்டைமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபசு நாட்கள்....



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரனே! சகோதரியே!

தபசு நாட்களுக்கு (Lent Days) ஊடாகக் கடந்து சென்று கொண்டிருக்கும் நானும் நீங்களும் உண்மையான தபசு நாட்களின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆங்கிலத்தில் Lent இனைப் பார்க்கும் போது Leave Every Negative Thing ஆக உள்ளது. அதாவது "எல்லா விதமான எதிர்மறையான காரியங்களையும் விட்டு விலகு" என்பதே அதன் அர்த்தமாய் உள்ளது. இத் தபசு நாட்களில் பலர் மாமிச உணவைத் தவிர்த்தல், உபவாசம் இருத்தல், தொலைக்காட்சியைப் பார்க்காதிருத்தல், மதுவை அருந்தாதிருத்தல் என பல வழிகளில் அனுஷ்டிக்கின்றனர். ஆனால் இவற்றுக்கு அப்பால் இயேசுகிறிஸ்து விரும்புகிற பிரகாரமாய் நாம் இந்த தபசு நாட்களுக்கூடாக கடந்து செல்ல அழைக்கப்படுகின்றோம்.

நாம் பிலிப்பியர் 3ம் அதிகாரம் 7ம் வசனம் முதல் 14ம் வசனம் வரை பார்க்கின்ற நேரத்தில் உண்மையான உபவாசத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளக் கூடியதாய் இருக்கும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள வண்ணமாய் நாம் பழைய எதிர்மறையான காரியங்களை மறந்து நமக்கு முன்னான காரியங்களை நினைத்தவர்களாய் பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காய் இலக்கை நோக்கி இந் நாட்களில் ஓட அழைக்கப்படுகின்றோம். இவ் விசுவாச பயிற்சியின் நாட்களில் எம்மை நாம் ஒறுத்து வாழக்கூடிய ஆறு விதமான காரியங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகின்றேன்.

**1. வெறுப்பையும் கோபத்தையும் ஒறுத்தல் :**

ஒவ்வொருநாளும் நாம் மற்றவர்களை இன்னும் அதிகமாய் நேசித்து அவர்களை அன்பு செலுத்த அழைக்கப்படுகின்றோம். அன்பு சகலத்தையும் தாங்கும் (1 கொரி 13:7) என குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல் கோபம் வரும் நேரங்களில் வெறுப்பைத் தவிர்த்து அதிகமாக அன்பு செலுத்துவோம்.

**2. மற்றவர்களை நியாயம் தீர்த்தலை ஒறுத்தல் :**

மற்றவர்கள் தவறு இழைக்கும் நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு அவசரப்படாமல் ஆறுதலாக சகலத்தையும் விசாரித்து நியாயம் தீர்க்க அழைக்கப்படுகின்றோம். மற்றவர்களை நியாயம் தீர்ப்பதற்கு முதல் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் தீர்க்கத் தகுதியானவர்களா என நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். இயேசுகிறிஸ்து எவ்வாறு நமது பாவங்களை மன்னித்தாரோ அவ்வாறே நாமும் மன்னித்து வாழ்வோம்.

**3. நம்பிக்கையீனத்தை ஒறுத்தல் :**
நம் வாழ்வில் வரும் சிறு பிரச்சினைகளைக் கண்டு பயந்து வாழ்க்கையின் மீது நம்பிக்கையை இழப்பதைப் போல் மற்றவர்களின் நம்பிக்கையையும் இல்லாமல் செய்கின்ற நிலையிலிருந்து மாற அழைக்கப்படுகின்றோம். எல்லா மனிதர்களைப் போலவே எமக்கும் பாடுகள் வருகின்றது. அதேபோல் அதிலிருந்து தப்பும் படியான வழியையும் இயேசு கிறிஸ்துவே உண்டாக்குகிறார் (1 கொரி 10:13). எனவே, நாம் கர்த்தரிடத்தில் எல்லாவற்றையும் ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிருப்போம். மற்றவர்களுக்கும் நம்பிக்கை உண்டாக்குவோம் (சங் 37:3)

**4. குறை சொல்லுதலை ஒறுத்தல்:**
எப்போதும் எம் வாழ்வில் உள்ள குறைகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு முறுமுறுத்துக் கொண்டு வாழாதபடி இருக்க அழைக்கப்படுகின்றோம். அன்று இஸ்ரவேலர் வனாந்தரத்தில் முணுமுணுத்து, கர்த்தரின் கோபத்தால் அழிக்கப்பட்டது போல் அழிக்கப்படாதிருப்போம். எமக்கு குறைவுகள் வரும் நேரத்தில் சற்றுநேரம் கண்களை மூடி கர்த்தர் இந்நாள் வரை செய்து வந்த ஒவ்வொரு நன்மைகளையும் நினைத்து துதிக்கும் போது எம் குறைவுகளை நிவிர்த்தி செய்ய அவர் வல்லவராய் இருக்கிறார் (பிலி 4:19).

**5. மனக்கசப்பை ஒறுத்தல் :**
எம்முடைய மனதை நோகப் பண்ணியவர்களையும் முழுமையாக மன்னித்து மனக்கசப்பு எதுவும் இன்றி சகஜமாக அவர்களோடு பழக அழைக்கப்படுகின்றோம். அன்று இயேசு கிறிஸ்து தம்மை சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னித்ததைப் போன்று நாமும் நம்மைப் துன்பப்படுத்துபவர்களையும் நிந்திக்கிறவர்களையும் சிநேகித்து அவர்களுக்காக ஜெபிப்போம் (மத் 5:44).

**6. தேவையற்ற செலவுகளை ஒறுப்போம் :**
அவசியமற்ற வகையில் வீணாக நாம் செய்யும் செலவுகள் ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்தி, அவற்றை நாம் கர்த்தரின் பணிக்காகப் பயன்படுத்த அழைக்கப்படுகின்றோம். இன்று சகல வசதிகளோடு இருக்கும் நாம் எமது சகோதரர்களை நோக்கிப் பார்ப்போம். அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, உறையுள் இல்லாமல் தவிக்கும் மக்களுக்கு உதவி செய்யும் ஊழியங்களுடன் கரம் கோர்த்து பணியாற்றுவோம்.

இரட்சகராகிய இயேசுகிறிஸ்து இத்தபசு நாட்களில் மட்டுமல்ல, தொடர்ந்தும் மேலே கூறிய ஆறு காரியங்களை ஒறுத்து வாழ கிருபை செய்வாராக! ஆமென்.

தொகுப்பு : சகோ. அனோஜன்
மூலம் : இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடுகள் மத்தியிலும் உம்மோடு வாழ கற்றுத்தாங்க இயேசப்பா.....

இன்றைக்கு எம்முடைய வாழ்விலே பல விதமான பாடுகள் காணப்படுகின்றன. நாம் எம்முடைய சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சோதனையில் அகப்பட்டு, அதினிமித்தமாக பாடநுபவிக்கிறோம். இந்தப் பாடுகள் எம்முடைய வாழ்விலே ஆசீர்வாதத்தைக் கொண்டு வர முடியாது. மாறாக நாம் தேவனோடு நெருங்கி வாழும்போது எம்முடைய வாழ்விலே வருகின்ற துன்பங்கள், பாடுகள் மத்தியிலே நாம் பல பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். இன்றைக்கு மனிதனுடைய வாழ்விலே எதிர்பாராத சம்பவங்கள், வியாதி, வறுமை, குறைவு, முறுமுறுப்பு, கலகம், பொய்க் குற்றம் போன்ற விதங்களில் பாடுகள் வருகின்றன. 'இதென்ன பாடுகள் மூலம் கற்றுக் கொள்ள இருக்கின்றது' என்று கேட்கத் தோன்றுகிறதா? ஆமாம் நிறையவே இருக்கின்றது.

நாம் வேதத்திலே பார்க்கின்ற போது பலர் பாடுகளை அனுபவித்து இருக்கின்றார்கள்; பல பாடங்களையும் அவர்களின் வாழ்வின் மூலம் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். நாம் வேதத்திலே ஸ்தேவானைப் பார்க்கும் போது தான் தேவனைச் சார்ந்து வாழ்ந்ததால் அவருக்கு வந்த துன்பத்தின் போது தனக்கு விரோதமாய் எழும்பினவர்களை அவர் மன்னிக்கும்படி தேவனை நோக்கி வேண்டியதை நாம் காண முடியும் (அப் 7:60). இன்றைக்கு நாங்களும் இவ்வாறான பாடத்தைக் கற்றுக்கொள்ள அழைக்கப்படுகின்றோம். எங்களுக்கு விரோதமாக எழும்புவோரை, துன்பம் விளைவிப்போரை மன்னிக்க எங்களுக்கு வேதம் கற்றுத் தருகிறது. இயேசுவைப் போல பாடு அனுபவித்தவரை நாம் காண முடியாது. அவருடைய அந்த மன்னிப்பின் பாடத்தை அவர் சிலுவையிலே கூறிய முதலாவது வார்த்தையிலேயே நாம் கற்றுக்கொள்ள முடியும் (லூக்கா 23:34).

மேலும், யோசேப்பைப் பார்க்கும் போது யோசேப்பின் மேல் பொய்க்குற்றம் சுமத்தி அவரை சிறையில் இட்டபோதும் அவர் தேவனையே நம்பி, பொறுமையோடு காத்திருந்தபடியால் தேவன் யோசேப்பை எகிப்து முழுவதுக்கும் அதிகாரியாக்கினார். இன்றைக்கு எம்முடைய வாழ்க்கையிலும் யோசேப்பின் சிறையிருப்பு மாற தாமதம் வந்தது போல தாமதமாகினாலும், நிச்சயமாய் தேவன் விடுவிப்பார் என்ற விசுவாசத்தோடு கூடிய பொறுமையையும் எமது பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் அனுபவத்திலே நாம் கற்றுக் கொள்ள வேண்டியவர்களாய் இருக் கின்றோம். இன்றைக்கு பாடுகள் பல நேரங்களிலே சுமையாய், வேதனை யாய் இருந்தாலும் நாம் தேவனோடு அண்டி வாழ்வதற்கும், எம்முடைய விசு வாச வாழ்வு பெலப்படவும் பல பாடங் களை கற்றுத்தருகின்றது.

சாரிபாத் ஊர் விதவையை நோக் கினால் தனக்கு இருந்த குறைவிலும் அவள் பகிர்ந்து கொடுக்கக் கற்றுக்கொண் டாள். இன்றைக்கு எம்முடைய குறை விலே, போதாமையிலே, தேவையிலே என்னிடம் உள்ளதிலே நான் இன்னொ ருவருக்குப் பகிர்ந்து கொடுக்க ஆயத்த மாக இருக்கின்றேனா? நாங்கள் கற் றுக்கொள்ளுவோம். "பாடுகள் இயேசு கிறிஸ்துவை பூரண புருஷனாக்கியது". வேதம் கூறுகிறது "இரட்சிப்பின் அதிப தியை உபத்திரவங்களினாலே பூரணப் படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந் தது" (எபி 2:10)

இன்னும் நோக்கினால் யோபு தனது பாடுகள் மத்தியிலும் பொறுமை, விசுவாசம், சாட்சியான வாழ்வு போன்ற வற்றைக் காத்துக்கொண்டார். இன்று நாமும் எங்கள் பாடுகளின் மத்தியிலே இவ்வாறான காரியங்களைக் காத்துக் கொள்ள, கற்றுக்கொள்ள அழைக்கப்படு கின்றோம். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவ ரும் துன்பப்படுவார்கள்", "நீ கற்று நிச்ச யித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு" (2 தீமோ 3:12,14). ஆகவே, இன்றைக்கு பாடுகள், பிரச்சினைகள் வருகின்ற போது நாங்கள் கிறிஸ்துவில் நிலைத்தி ருந்து ஒருவரையொருவர் நேசித்து, மன்னித்து, பகிர்ந்துகொடுத்து, காத்தி ருந்து வாழ கற்றுக்கொள்ளும்படி தேவன் எங்களை அழைக்கிறார். "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான் கள்" (மத் 5:4), "அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அரு ளப்பட்டிருக்கிறது" (பிலி 1:29). இவ் வாறு வேதத்திலே நாம் பல வசனங் களை காணமுடியும். இன்றைக்கு மனிதர்களால், இயற்கையால் பல பாடுகள் வந்தாலும் அவற்றிலே நாம் தேவனிலே நிலைத்திருக்க அழைக் கப்படுகின்றோம். பவுலின் பிரயாணத் திலே கப்பலிலே புயல் வந்தபோதும் அவன் அங்கிருந்த அனைவருக்கும் ஆறுதல்கூறி தலைவனாய் இருந்து வழிநடத்தியதையும் நாம் காணமுடி யும் (அப். 27). ஆகவே, இன்றைக்கு எம்முடைய வாழ்விலே பாடுகள், உபத் திரவங்கள் வரும்போது எங்கள் பரம தகப்பனை நோக்குவோம். "அப்பா உங்களுடைய பெலனை தாங்கப்பா, பொறுமையை, சகிப்புத் தன்மையைத் தாங்கப்பா" என்று கேட்போம். எங்க ளைத் தள்ளிவிடாத தேவன், மறவாத நேசர், எங்கள் பாடுகளைக்கூட ஆசீர் வாதங்களாக மாற்றி, எங்களை வழி நடத்துவார்.

**"நாம் அவரோடேகூட மரித்தோ மானால் அவரோடேகூட பிழைத் துமிருப்போம். அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்"** - (2 தீமோ 2:11,12)

சகோதரி **P.ஜெபா**
மெதடிஸ்த ஆலயம், தன்னாமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடுகளின் பாதையில்...



பாடுகள் ஏற்றிடவே இப் பாரினில் வந்தாரே! - நம்
பாவங்கள் போக்கிடவே இப் பூவில் உதித்தாரே!
பாசமுன்னில் வைத்ததினால் பாரச்சிலுவை சுமந்தாரே!
பாரோரின் பாவமற பாதாளம் வென்றாரே!

பாடுகளைக் கண்டு நீயும் பயப்படத் தேவையில்லை - அவர்
பாதைதனில் சென்று நீயும் பாடுகளை வென்றுவிடு
பாடு உன்னை நெருக்கையிலே பார்த்துவிடு அவர் முகத்தை
பாவங்களை வெறுத்துவிடு பாடுகளை வென்றிடலாம்

உபத்திரவம் உண்டென்ற உண்மையினைச் சொன்னாரே
உயிருள்ள சாட்சியாக உனை வாழச் சொன்னாரே
உபத்திரவம் சூழ்கையிலே ஊக்கமாக ஜெபித்திடடா
உத்தமனாய் வாழ்ந்து நீயும் அவர் ஊழியத்தைச் செய்திடடா

உறவு உன்னை வெறுத்திடலாம் உலகம் உன்னைப் பகைத்திடலாம்
உன்னதராம் இயேசு உன்னை உயர்த்திடுவார் இன்றைக்கே
உன் வாழ்வில் மட்டும்தான் உபத்திரவம் என்கிறாயோ
உயிருள்ள இயேசுவுண்டு உறங்காமல் காத்திடுவார்

எதுவரைக்கும் என் வாழ்வில் ஏமாற்றம் என்கிறாயோ
எல்லாமே என் வாழ்வில் இயேசு என்று எண்ணிவிடு
என் இயேசு பாதமதை எட்டி நீயும் பிடித்துவிடு
எவ் வழியாய் என்பாடு மறைந்ததென்று வியந்திடுவாய்

எளியவர்க்கு உதவிவிடு பிறர் பாடுகளைப் புரிந்துவிடு
எல்லாமே எனக்கென்ற எண்ணத்தை விட்டுவிடு
எப்படியும் வாழலாமே என்று நீயும் எண்ணாதே
என் வாழ்வு எல்லாமே என் இயேசுவுக்கே என்பாயா?



சகோ. ஜேம்ஸ் சர்வா - கோட்டைமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் ஜெபத் தேவைகளை

## எங்களுக்குத் தபால் மூலமாகவோ,

## மின்னஞ்சல் மூலமாகவோ,

## SMS மூலமாகவோ அனுப்பி


## வைக்கலாம்.

**SMS க்கான இலக்கங்கள்**

**077-7813269,**
**077-2335106,**
**077-9584930,**
**077-7718847**



வாலிபர்களுக்கான விஷேட ஜெபம்
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்
காலை 7.00 மணிக்கு
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில்**
இடம்பெறும்.



**இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக!**

**மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம்**
**கோட்டைமுனை.**


கடிதத் தொடர்புகளுக்கு :
**ஆசிரியர்,**
**"வாலிபன்" சஞ்சிகை,**
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.
மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com



சன் அச்சகம் - மட்டக்களப்பு. 065-2222597





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org